# அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் முஸ்லிம் மாணவர்கள் மத்தியில் ஆங்கிலக் கல்வியின் நிலை (க.பொ.த. சாதாரண தர மாணவர்களை மையப்படுத்திய ஆய்வு)

**N.Mohammed Misbah [(1)], M.H.M.Maslama [(2)], M.H.F.Sahara [(3)], M.B.F.Rikasa [(4)]**

[1, 2, 3 & 4] Student of Department of Islamic studies, Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka

nmmisbah93@gmail.com, maslamhaneef65@gmail.com,

mhfsahara@gmail.com, mbfrikasa@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

இன்றைய வர்த்தக உலகில் ஆங்கில மொழியின் முக்கியத்துவம் அளவிட முடியாததாகும். இன்னும் தகவல் தொழில்நுட்ப விருத்தியும் ஆங்கிலக் கல்வி அத்தியாவசியமாக இருப்பதற்கு மற்றொரு காரணியாக உள்ளது. இதனால் பாடசாலைக் கல்வியானது ஆங்கிலக் கல்வியை முக்கியப்படுத்தும் நிலையமாக உள்ளது. இருப்பினும் இன்றைய அளவில் பாடசாலை மாணவர்களிடையே ஆங்கிலக் கல்வியானது பின்தங்கிய நிலையில் காணப்படுவதனால் முஸ்லிம் மாணவர்களிடையேயான ஆங்கிலக் கல்வி மட்டத்தினை அறிந்து, அதனை மதிப்பிட்டு அவர்கள் பின்தங்குவதற்கான காரணங்களையும் கண்டறிந்து அவற்றைத் தீர்ப்பதற்கான ஆலோசனைகளை முன்வைப்பதே எமது நோக்கமாகும். இவ் ஆய்வானது அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் சாதாரண தரத்தை உள்வாங்கிய ஆறு பாடசாலைகளில் இருந்து எழுமாறாக மூன்று பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு தலா 30 மாணவர்கள் வீதம் மொத்தமாக 90 மாணவர்களை கொண்டமைந்த மாதிரியாகும். இவ் ஆய்வானது தொகை ரீதியான தரவுகளை கொண்டதாக அமைந்துள்ளதுடன் வினாக்கொத்து முறையில் தரவுகள் திரட்டப்பட்டுள்ளன. இவ் ஆய்வானது முதலாம் தர மற்றும் இரண்டாம் தர தரவுகள் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வினூடாக அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் காணப்படுகின்ற முஸ்லிம் மாணவர்களிடையே ஆங்கிலக் கல்வி பின்தங்கி உள்ளமையும், அதில் திருப்தியற்ற நிலையும் காணப்படுகின்றது எனக் கண்டறியப்பட்டுள்ளது. இதனடிப்படையில் பாடசாலைக் கல்விச் செயற்பாடுகள் இன்னும் வினைத்திறன் உள்ளதாக மாற்றி அமைக்கப்படல், பிள்ளைகளுக்கு ஆரம்ப பாடசாலைகளில் இருந்தே ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவத்தை தெளிவூட்டி அதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்தல் மற்றும் வீட்டுச்சூழலை ஆங்கில மொழி விருத்திக்கேற்ற வகையில் அமைத்தல் வேண்டும் என்பன இவ்வாய்வின் முடிவாகப் பெறப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்:** ஆங்கிலக் கல்வி, பாடசாலை, சாதாரண தர மாணவர்கள், அட்டாளைச்சேனை

## அறிமுகம்

தொடர்பாடல்கள் மிக வேகமாக வளர்ந்து வரும் இக்கால கட்டத்தில் உலக மக்களை ஒன்றிணைக்கும் ஊடகமாக ஆங்கிலக் கல்வி வளர்ச்சி கண்டுள்ளது. அதனைக் கற்க வேண்டிய அவசியமும், தேவைப்பாடும் அனைவருக்கும் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக மாணவர் சமுதாயம் இதில் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இன்று பெரும்பாலும் பல்கலைக் கல்வியானது முற்று முழுதாக ஆங்கில மயப்படுத்தப்பட்டு வருகின்றது. அப்போதுதான் எமது பல்கலைக்கழகங்களும்

உலக தரத்திற்கு ஏற்ப கல்வியைப் பேண முடியும். இதனால் பல்கலைக் கல்விக்கு ஏற்ற வகையில் மாணவர்களை பாடசாலையில் தயார் படுத்த வேண்டியுள்ளது.

ஏனெனில் உலகம் முழுவதுமுள்ள மக்கள் அதை இரண்டாம் மொழியாகப் படிக்கத் தீர்மானிக்கின்றனர். பல நாடுகளில் பாடசாலைப் பாடத்திட்டத்தில் ஆங்கில மொழியை இரண்டாம் மொழியாக அமைத்துக் கொள்வதோடு இளம் வயதினரிடையே ஆங்கில மொழியை வளர்க்கவும் செயற்பாடுகள் முன்னெடுக்கப் படுகின்றன. உலகில் ஐந்து பேரில் ஒருவருக்கு ஆங்கிலம் பேசவோ குறைந்த பட்சம் புரிந்து கொள்ளவோ முடியுமான அளவுக்கு பொது மொழி ஆகிவிட்டது. இன்னும் 53 நாடுகளின் உத்தியோக பூர்வ மொழியாக ஆங்கிலம் உள்ளதோடு சொந்த நாட்டில் ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் நல்ல வேலை கிடைப்பதற்கு அல்லது வெளிநாட்டில் பணிபுரியும் வாய்ப்புக்களை பெற்றுத் தருவதில் ஆங்கிலக் கல்வி முன்னணி வகிக்கின்றது. (British Study Center, (2015), www.british-study.com)

இன்று ஒவ்வொரு மாணவனையும் அரசியல், சமூக, பொருளாதார ரீதியாக அபிவிருத்தியடையச் செய்தலிலும், மாறுகின்ற உலக மாற்றங்களுக்கேற்ப தன்னைத்தானே ஒழுங்குபடுத்தத் தேவையான பண்புகளை உருவாக்குவதிலும் பாடசாலைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. பாடசாலைக் கல்வியானது அபிவிருத்தியை ஏற்படுத்தி நாட்டின் வளர்ச்சிக்கு ஒரு ஊடகமாகவும் நிறுவனமாகவும் தொழிற்படுகின்றது. உலகின் பல நாடுகள் ஆங்கிலக் கல்வி முறையை நடைமுறைப்படுத்தி வந்தாலும் இலங்கையில் தாய்மொழிக் கல்வி முறையே பெரும்பாலும் பாடசாலைகளில் நடைமுறையில் உள்ளது. (திரவியராஜா, 2016) இரண்டாம் மொழியாக ஆங்கிலம் போதிக்கப்படுகின்றது. முஸ்லிம் பாடசாலைகளைப் பொருத்தளவில் பெரும்பான்மையாக தமிழ் மொழியே முதல் இடத்தை வகிக்கின்றது. ஆனால் ஒரு வரையறைக்கு மேலே சென்றால் தமிழில் கற்பதற்கான கற்கை நெறிகளோ, புத்தகங்களோ இல்லை என்பதே உண்மையாகும். எமது மொழியில் எப்புதிய கண்டுபிடிப்புக்கள் என்றாலும் அவற்றிற்கான விளம்பரங்களோ, அறிவியல் தொழில்நுட்பங்களோ உடன் கிடைப்பதில்லை. காலம் கடந்து வரும் தகவல்களும் முழுமையானதாக இல்லை. (அருண்,எச்.கே.,(2016),www.aangilam.page)

அந்த வகையில் இலங்கை முஸ்லிம் மாணவர்களிடையேயான ஆங்கிலக் கல்வி விருத்தியானது பல வகைகளிலும் அச்சமூகத்தின் தேவையாக உள்ளது. அதனடிப்படையில் அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று வலயத்தில் முழுமையாக முஸ்லிம்களை மாத்திரம் கொண்ட பிரதேசமாக அட்டாளைச்சேனை விளங்குகின்றது. அங்குள்ள பாடசாலைகளில் 6 பாடசாலைகள் சாதாரண தரத்தைக் கொண்டமைந்துள்ளன. அவற்றில் எழுமாறாக 3 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அங்குள்ள மாணவர்கள் தங்கள் எதிர்காலத்தினை வளப்படுத்திக் கொள்ள ஆங்கிலக் கல்வியானது மிக அத்தியாவசியமானதாக உள்ளதெனலாம். இந்த வகையில் முழுக்க முஸ்லிம் மாணவர்களை உள்ளடக்கிய அட்டாளைச்சேனைப் பிரதேசப் பாடசாலைகளான அக்/அந்-நூர் மகா வித்தியாலயம், அக்/அறபா வித்தியாலயம், அக்/ அல்-அர்ஹம் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் சாதாரண தர மாணவர்களிடையே ஆங்கிலக் கல்வியின் நிலை, அதன் விருத்தியின்மைக்கான காரணங்கள் போன்றன இவ்வாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

**ஆய்வுப் பிரச்சினை**

எமது ஆய்வுக்குட்படுத்தப்பட்ட அட்டாளைச்சேனைப் பிரதேசமானது முழுக்க முழுக்க முஸ்லிம்களையே கொண்ட பிரதேசமாகும். இங்கு பல பாடசாலைகள் மற்றும் பல்வேறு கற்கை

முறைகள் காணப்பட்ட போதிலும் அங்குள்ள முஸ்லிம் மாணவர்களிடையே ஆங்கில அறிவு விருத்தியின்மையை அவதானிக்க முடிகின்றது. இன்னும் மாணவர்கள் ஏனைய பாடங்களில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுகின்ற அதே வேளையில் ஆங்கிலப் பாடத்தில் குறைந்தளவிலான சித்திகளைப் பெறுகின்றமையை அவதானிக்கலாம்.

அதே வேளை அட்டாளைச்சேனைப் பிரதேச மாணவர்களின் இரண்டாம் மொழியான ஆங்கிலத்தில் சித்தியெய்கின்ற வீதமானது தாழ்ந்த நிலையில் உள்ளமை அறியக் கூடியதாக உள்ளது. மாணவர்களின் ஆரம்ப நிலையிலிருந்து தொடர்ச்சியாக ஆங்கிலக் கல்வி வழங்கப்பட்டும் இம்மாணவர்களின் ஆங்கில விருத்தியானது தாழ்ந்த நிலையில் உள்ளமை இவ்வாய்வுப் பிரச்சினையாகக் கொள்ளப்படுகின்றது. அந்த வகையில் காலத்தின் தேவை கருதியும் அட்டாளைச்சேனைப் பிரதேச மாணவர் சமுதாயத்தின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டும் 'அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் முஸ்லிம் மாணவர்கள் மத்தியில் ஆங்கிலக் கல்வியின் நிலை' என்ற இத்தலைப்பு ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றது.

**ஆய்வின் நோக்கம்**

- அட்டாளைச்சேனைப் பிரதேச பாடசாலைகளில் சாதாரண தரத்தில் கற்கும் மாணவர்களது ஆங்கிலப்பாடத்திலான அடைவையும், ஆர்வத்தினையும் கண்டறிதல்.
- அட்டாளைச்சேனைப் பிரதேச சாதாரண தர மாணவர்கள் ஆங்கிலக் கல்வியில் பின்தங்குவதற்கான காரணங்களைக் கண்டறிதல்.
- முஸ்லிம்களிடையே ஆங்கிலக்கல்வி மட்டத்தினை அதிகரிப்பதற்கும் தெளிவினை ஏற்படுத்துவதற்குமான ஆலோசனைகளை வழங்குதல்.

**ஆய்வு முறைமை**

இவ்வாய்வானது தொகை ரீதியான தகவல்களை உள்ளடக்கி அமையப் பெற்றுள்ளது. ஏனெனில் இவ்வாய்வானது முழுமையாக முஸ்லிம் மாணவர்களை உள்ளடக்கியுள்ள இப்பிரதேசத்தில் மாணவர்களிடையே ஆங்கிலக் கல்வி மட்டத்தினை அறிதல், மற்றும் அவர்களிடையே ஆங்கிலக்கல்வி மட்டத்தினை மதிப்பிடல், முஸ்லிம்களிடையே ஆங்கிலக்கல்வி மட்டத்தினை அதிகரிப்பதற்கும் தெளிவினை ஏற்படுத்துவதற்குமான ஆலோசனைகளை வழங்குதல் என்பன இவ்வாய்வின் நோக்கங்களாக அமைவதனால் வினாக்கொத்து முறையில் தரவுகள் திரட்டப்பட்டுள்ளன. இதனால் இவ்வாய்வுக்கு திரட்டப்பட்ட தரவுகள் தொகை ரீதியாக அமைந்துள்ளன.

இவ்வாய்வை மேற்கொள்வதற்காக முதல் நிலைத் தரவுகளும், துணை நிலைத் தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதல் நிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டே இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. முதல் நிலைத் தரவுகள் என்பது ஆய்வுக் களத்திற்கு நேரடியாகச் சென்று உற்று நோக்கல், நேர்காணல், வினாத் தொகுப்பு போன்ற கருவிகளைக் கொண்டு திரட்டப்படும் தரவுகளாகும். இவை பிறரால் சிதைக்கப் படாமலும், புனையப் படாமலும் ஆய்வாளர்களினால் ஆய்வின் நோக்கத்தை அடையும் பொருட்டு சேகரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாய்விற்காக தரவுகள் அட்டாளைச்சேனைப் பிரதேசத்திலுள்ள சாதாரண தரத்தை உள்வாங்கிய 05 பாடசாலைகளில் இருந்து எழுமாறாக 03 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு அங்குள்ள மாணவர்களிடம் இருந்து தரவுகள் சேகரிப்பதற்காக வினாக்கொத்து முறை

பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வினாக்கொத்து முறையானது ஆய்வின் நோக்கத்தை அல்லது இலக்கை அடையும் பொருட்டு கட்டமைக்கப்பட்டு தொகுத்து விநியோகிக்கப்பட்டது.

இவ்வாய்வினை மேற்கொள்வதறக்காக ஆய்வாளர்களினால் சுயமாகக் கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்தே இவ்வாய்வின் குடித்தொகை மாதிரியாகும். அட்டாளைச்சேனைப் பிரதேசத்திலுள்ள சாதாரண தரத்தை உள்வாங்கிய 05 பாடசாலைகளில் இருந்து எழுமாறாக 03 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு அங்குள்ள மூன்று பாடசாலையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொரு பாடசாலையிலிருந்து எழுமாறாக 30 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு மொத்தமாக 90 மாணவர்களைக் கொண்ட மாதிரியாகும். இங்கு சாதாரண தரத்தில் உள்ள மாணவர்கள் மத்தியில் மற்றும் அவர்களிடையே ஆங்கிலக்கல்வி மட்டத்தினை மதிப்பிடுவதற்காக வினாக்கொத்துக்கள் விநியோகிக்கப்பட்டு திரட்டப்பட்ட தகவல்கள் முதல் நிலைத் தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அட்டாளைச்சேனைப் பிரதேசத்திலுள்ள சாதாரண தரத்தில் உள்ள இப்பிரதேசத்தில் மாணவர்களிடையே ஆங்கிலக் கல்வி மட்டத்தினை அறிவதற்காக அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் முஸ்லிம் மாணவர்கள் மத்தியில் ஆங்கிலக் கல்வியின் நிலை என்ற தலைப்பில் இவ்வாய்விற்காக தகவல்களை சேகரிக்கும் நோக்கில் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட வினாக்கொத்தானது 21 வினாக்களைக் கொண்டதாக அமையப்பெற்றுள்ளது. தரவுகளைப் பகுப்பாய்வு செய்து விளக்குவதற்கு EXCEL 2010 , பை வரைபு என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

துணை நிலைத் தரவுகள்/ இரண்டாம் நிலைத் தரவுகள் என்பன ஆய்வு நோக்கத்திற்கு ஏற்ப ஏனையோரால் இதற்கு முன்னர் சேகரிக்கப்பட்ட தரவுகள், தகவல்கள் என்பவற்றைக் குறிக்கும். இவ்வாய்வினை சிறந்த முறையில் ஆக்கபூர்வமாக வடிவமைப்பதற்கு துணை நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், இதழ்கள், இணையத்தள வெளியீடுகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. அளவீட்டு முறையில் தரவுப்பகுப்பாய்வு நுட்பங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**கலந்துரையாடல்களும் பெறுபேறுகளும்**

அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் சாதாரண தரத்தை உள்வாங்கிய 06 பாடசாலைகளில் இருந்து எழுமாறாக 03 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு அங்குள்ள மாணவர்களிடம் இருந்து பெறப்பட்ட தரவுகள் பின்வருமாறு காணப்பட்டன.

01. மூன்று பாடசாலைகளிலும் மாணவர்களிடையேயான ஆங்கிலப் பாடத்திலான திருப்தி நிலை பற்றிய தரவுகள் பின்வருமாறு கிடைக்கப் பெற்றன.

அட்டவணை 1 – பாடசாலை ரீதியாக மாணவர்களிடையேயான திருப்தி நிலை

| புாடசாலை | மிகத்திருப்தி | திருப்தி | நடுநிலை | திருப்தியின்மை |
|---|---|---|---|---|
| அந்நூர் | 10% | 23.3% | 50% | 16.6% |
| ஆறபா | 16.6% | 26.6% | 40% | 16.3% |
| அர்ஹம் | - | 50% | 20% | 30% |


மூலம் : வினாக்கொத்து அளவை ஆய்வு 2018

இவ்வட்டவணையானது பாடசாலைகளில் ஆங்கிலக் கல்வி மீதான எதிர்மறையான தோற்றப்பாட்டை காட்டுகின்றது. மாணவர்களின் மிகத்திருப்தி என்ற நிலை தாழ்ந்த மட்டத்தில் காணப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது. இது ஆய்வுப் பிரச்சினையை தெளிவாகக் காட்டுகின்றது.

அட்டவணை: 2 மூன்று பாடசாலைகளிலும் ஆங்கிலப் பாடத்திலான திருப்தி நிலை (மொத்த விகிதம்)

| **திருப்தி நிலை** | **மொத்த மாணவர்கள் (வீதம்)** |
|---|---|
| மிகத் திருப்தி | 8.8% |
| திருப்தி | 33.3% |
| நடுநிலை | 36.6% |
| திருப்தியின்மை | 21.1% |

மூலம் : வினாக்கொத்து அளவை ஆய்வு 2018




வரைபு: 01 பாடசாலைகளிலும் ஆங்கிலப் பாடத்திலான திருப்தி நிலை

இவ் வரைபை நாங்கள் நோக்கும் போது மாணவர்களிடையேயான திருப்தி மட்டங்களின் விகிதாசாரத்தை அறிய முடிகின்றது. இதில் நாங்கள் பார்க்கும் போது அதிகளவிலான மாணவர்கள் ‘நடுநிலை’ மட்டத்தினையே குறிப்பிட்டிருப்பதினைக் காணலாம். இதன் மூலம் மாணவர்களின் திருப்தியற்ற நிலை ஒப்பீட்டளவில் அதிகமாக உள்ளது. இதற்கான காரணங்களாக மாணவர்களால் குறிப்பிடப்பட்டவையாவன, அடிப்படை ஆங்கில அறிவு போதாமை, குறைந்தளவிலான புள்ளிகள் பெறுகின்றமை, ஆங்கில மொழியில் கற்பிப்பதால் விளங்கிக் கொள்ள முடியாமை, கற்பித்தலில் திருப்தியின்மை, ஆங்கிலப்பாடம் நடைபெறுகின்ற நேரத்தின் தாக்கம் ( இறுதிப்பாட வேளையாக உள்ளமை ) என்பனவையாகும்.

குறிப்பிட்ட சில மாணவர்கள் ஆங்கில பாடத்தில் தங்கள் திருப்தி நிலையை வெளிப்படுத்தும் காரணங்களாவன, ஆசிரியர் இலகுலவான முறையில் கற்றுக் கொடுக்கின்றமை, ஆங்கில கல்வி மீதான அடிப்படை ஆர்வம், சுய தேடல், கருத்து விளங்குகின்றமை போன்றவற்றைக் குறிப்பிட முடியும்.

02. மாணவர்கள் பாடசாலை தவிர்ந்து ஆங்கில மொழியைக் கற்கும் வேறு வழிமுறைகளை கையாள்கின்றனரா என்ற வினாவிற்கு கிடைக்கப்பெற்ற பெறுபேறு ( பாடசாலை ரீதியானது).

அட்டவணை – 03 பாடசாலை தவிர்ந்த வழிமுறைகள் உள்ளனவா என்பதற்கான விடை

| பாடசாலைகள் | வழிமுறைகள் | |
|---|---|---|
| | ஆம் | இல்லை |
| அந்நூர் | 83.3% | 16.6% |
| ஆறபா | 73.3% | 26.6% |
| அர்ஹம் | 83.3% | 16.6% |

மூலம் : வினாக்கொத்து அளவை ஆய்வு 2018

இதனை வைத்துப் பார்க்கும் போது மாணவர்கள் ஆங்கில கல்வியினை பாடசாலை தவிர்ந்த ஏனைய வேறு வழிமுறைகள் மூலம் பெற்றுக்கொள்கின்றர் என்பது புலனாகின்றது. மிகச் சொற்பமானவர்களே பாடசாலைகளில் மாத்திரம் தங்கியுள்ளனர் என்பதனையும் காணக்கூடியதாக உள்ளது.

03. பாடசாலை தவிர்ந்து ஆங்கிலக் கல்வியினைப் பெறும் வேறு வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றதா என ஆய்வு செய்த போது கீழ்வரும் தகவல்களை எம்மால் பெற முடிந்தது. (மொத்த விகிதாசாரம்)

வரைபு 2 : மாணவர்கள் பாடசாலைக் கல்வி தவிர்ந்து ஆங்கிலக் கல்வி பெறும் ஏனைய வழிமுறைகள் உண்டா எனக் கேட்கப்பட்ட போது கிடைத்த தரவுகள்.




| தெரிவு | விகிதம் |
|---|---|
| ஆம் | 80% |
| இல்லை | 20% |

04. மாணவர்கள் பாடசாலை தவிர்ந்து எவ்வழிமுறைகளை கையாள்கின்றனர் என வினவப்பட்ட போது எமக்கு கிடைக்கப்பெற்ற தரவுகள் ஆவன,

அட்டவணை – 04 பாடசாலை தவிர்நத ஏனைய வழிமுறைகள்

| வழிமுறை | பயன்படுத்தும் மாணவர்கள்(விகிதம்) |
|---|---|
| மாலைநேர வகுப்பு | 63.5% |
| வெளிவாரியான விசேட கற்கை | 05% |
| இரண்டிலும் | 31.5% |

மூலம் : வினாக்கொத்து அளவை ஆய்வு 2018


இதனடிப்படையில் நோக்குகையில் அதிகளவிலான மாணவர்கள் மாலைநேர வகுப்பினையே நாடுகின்றனர் என்பது அறியக்கிடைக்கின்றது. இங்கு பாடசாலைகளில் மாத்திரம் தங்கியிருக்கவில்லை என்பதும் இவ்வாய்வின் ஊடாக அறிந்து கொள்ள முடிகின்றது.

05. மாணவர்கள் தாங்கள் ஆங்கில மொழியைக் கற்றுக்கொள்ள சிறந்த வழிமுறையாக எதனைக் கருதுகின்றார்கள் என்று வினாத் தொடுத்த போது பின்வருவன எமக்கு பெறுபேறாக கிடைக்கப் பெற்றன.

அட்டவணை: 05 மாணவர்கள் ஆங்கில கல்வி பெறும் சிறந்த வழிமுறைகள்

| **வழிமுறை** | **சிறந்தவை எனக் கருதும் மாணவர்கள்(விகிதம்)** |
|---|---|
| பாடசாலை | 32.22% |
| மாலைநேர வகுப்புகள் | 43.3% |
| பகுதிநேர வகுப்புகள் | 8.8% |
| வெளிவாரி | 15.5% |

மூலம் : வினாக்கொத்து அளவை ஆய்வு 2018




வரைபு: 03 மாணவர்கள் ஆங்கிலக் கல்வி பெறும் சிறந்த வழிமுறைகள

இத்தரவுகளின் அடிப்படையில் மாணவர்கள் மத்தியில் ஆங்கிலக் கல்வியைப் பெற்றுக்கொள்ளும் வழிமுறைகளில் பாடசாலை வகுப்புக்களையே சிறந்ததாக கருதுகின்றனர் என்று காணமுடிகின்றது. என்றாலும் மொத்த விகித அடிப்படையில் நோக்கும் போது ஏனைய வழிமுறைகளே அதிகம் கவனத்தை ஈர்த்துள்ளது எனலாம். இதனடிப்படையில் பாடசாலைகள் இன்னும் தங்கள் கவனத்தை அதிகம் செலுத்த வேண்டும் என்பதனை இவ்வாய்வு சுட்டிக் காட்டுகின்றது.

06. மாணவர்கள் தாங்கள் ஆங்கிலக் கல்வியைக் கற்பதில் எதிர்நோக்கும் சிரமங்களாக குறிப்பிட்டவை, வாசிப்பின்மை, ஆங்கில மொழியை சரளமாகப் பேசுவது கடினமாக உள்ளது, சொல்லாட்சியின்மை, இறுதிப் பாடவேளையாக ஆங்கிலம் உள்ளமை, தயக்கம், பயம் என்பாவையாகும்.

இவ்வாறான காரணிகள் முலம் மாணவர்கள் தங்களது ஆங்கில அறிவு விருத்தியில் பெரும் தடைகளை எதிர்நோக்கியுள்ளனர் என்பது தெளிவாகின்றது.

07. இன்னும் மாணவர்களின் வீட்டுச்சூழலின் பங்களிப்பு அவர்களின் ஆங்கிலக் கல்வி விருத்தியில் எவ்வாறுள்ளது என்று நோக்கும் வகையில் வினாத்தொடுக்கப்பட்ட போது பெருமளவான மாணவர்கள் தங்கள் வீடுகளில் ஆங்கில மொழிப்பயன்பாடு மிக அரிதாகவே உள்ளது என்று குறிப்பிட்டனர். ஏனெனில் ஒரு மாணவனின் கல்வியின் விருத்தியிலும் சரி பின்னடைவிலும் சரி அம்மாணவனின் சுற்றுச் சூழல் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது எனலாம். அதனால் தான் இன்று கல்வி உளவியலும் மாணவனின் வீட்டுச்சூழலில் தன் கவனத்தை செலுத்துகின்றது எனலாம். அதனடிப்படையில் அட்டாளைச்சேனைப் பிரதேச மக்களின் ஆங்கில மொழி நிலையானது முன்னேற்றப்பட வேண்டும் எனவும் கருதலாம். இதன் மூலம் ஒரு மாணவனின்

ஆங்கிலக் கல்வி பின்னடைவில் வீட்டுச்சூழலும் ஒரு பெரும் காரணியாக உள்ளது என்பதனை இவ்வாய்வு சுட்டிக்காட்டுகின்றது.

**முடிவுரை**

இன்றைய காலகட்டத்தில் ஆங்கிலக் கல்வி அறிவு என்பது அத்தியாவசியமான ஒன்றாக காணப்படுகின்ற வேளையில் அட்டாளைச்சேனைப் பிரதேசத்திலுள்ள க.பொ.த. சாதாரண தர முஸ்லிம் மாணவர்களிடையே அவர்களுடைய எதிர்கால உயர் கல்வி நடவடிக்கைகளையும், ஏனைய கற்றல் சார் தொழிற்பாடுகளையும் சிறப்பான முறையில் கொண்டு செல்ல ஆங்கிலக் கல்வி முக்கிய இடத்தைக் கொண்டுள்ளதனைக் காணலாம்.

இவ்வாய்வின் படி அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர மாணவர்களிடையேயான ஆங்கிலக் கல்வியின் நிலையினைக் கணிப்பிடக் கூடியதாக உள்ளது. அதாவது பெரும்பான்மை மாணவர்கள் ஆங்கிலப் பாடத்தில் பின்தங்கியவர்களாக உள்ளமையை அவதானிக்க முடியுமாக உள்ள அதே நேரம் ஆர்வமுள்ள மாணவர்களும் பல்வேறு தடைகளை எதிர்நோக்குவதால் உரிய அடைவினை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது என்பதும் இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இத்தகைய நிலைக்கு பல காரணிகள் செல்வாக்குச் செலுத்தியுள்ளமை இவ்வாய்வின் ஊடாக காண முடிகின்றது. அடிப்படை ஆங்கில அறிவு போதாமை, குறைந்தளவிலான புள்ளிகள் பெறுகின்றமை, ஆங்கில மொழியில் கற்பிப்பதால் விளங்கிக் கொள்ள முடியாமை, கற்பித்தலில் திருப்தியின்மை, ஆங்கிலப்பாடம் நடைபெறுகின்ற நேரத்தின் தாக்கம் ( இறுதிப்பாட வேளையாக உள்ளமை ) போன்ற காரணங்கள் இவ்வாய்வின் ஊடாக அறியப்பட்டுள்ளன.

அத்துடன் மாணவர்களின் ஆங்கிலக் கல்வியினை விருத்தி செய்தால் தான் மாணவர்கள் தங்கள் ஆங்கிலக் கல்வி நடவடிக்கைகளை எதிர்காலத்தை வளமாக்கக் கூடிய வகையில் கொண்டு செல்ல முடியும். அதனடிப்படையில் இவ்வாய்வினூடாகப் பெறப்பட்ட மாணவர்கள் பின்தங்குவற்கான காரணங்களைக் களையும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**பரிந்துரைகள்**

இவ்வாய்வினை மேற்கொண்டதன் ஊடாக சாதாரண தர மாணவர்களிடையே ஆங்கிலக் கல்வி விருத்தியின்மை கண்டறியப்பட்டுள்ளது. எனவே அவர்களிடையே ஆங்கிலக் கல்வி விருத்தி செய்வதற்காக பின்வரும் ஆலோசனைகள் ஆய்வாளர்களால் முன்வைக்கப்படுகின்றன.

- பிள்ளைகளுக்கு ஆரம்ப பாடசாலைகளில் இருந்தே ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவத்தை தெளிவூட்டல்.
- பாடசாலைகளில் ஆங்கிலப் பாடவேளையை கட்டாயமாக காலை வேளைகளில் மாற்ற வேண்டும்.
- தனியார் துறைகளை நாடிச் செல்லாதவாறு பாடசாலைக் கல்விச் செயற்பாடுகளை இன்னும் வினைத்திறன் உள்ளதாக மாற்றி அமைத்தல் வேண்டும்.
- வீட்டுச் சூழலில் உள்ளவர்கள் குறிப்பாக பெற்றோர்கள் ஆங்கிலம் பேசுவதற்கான வாய்ப்புக்களை வழங்கல் மற்றும் ஊக்கப்படுத்தல்.

- ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவம் பற்றி ஆசிரியர்கள், கல்விசார் உத்தியோகத்தர்கள் மற்றும் பட்டதாரிகள் போன்றவர்களுக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தல்.
- மிக முக்கியமாக மாணவர்கள் ஆங்கிலத்தில் பேசும் சூழலை உருவாக்கி அதன் மூலம் சிறந்த ஆற்றல் மிக்க மாணவர்களை உருவாக்கல்.

**உசாத்துணைகள்**


- Jameel, S.H.M., Ali Azeez, A.M., (2009), "Muslim Education in Sri Lanka", Colombo : AMA Azeez foundation.
- Crystal, D., (1997), English as a global language, Cambridge: Cambridge University press.
- ஹஸ்புல்லா, எஸ்.எச்., சைபுதீன், என்.பீ.எம்., (2000), "இலங்கையில் முஸ்லிம் கல்வி பெண் கல்வியும் உயர் கல்வியும்", Colombo: Muslim women's Research and Action Forum.
- திரவியராஜா, (2016), "இலங்கையில் ஆங்கிலக் கல்வியின் அஸ்தமனத்திற்கு சுயமொழிக் கல்வியும் ஒரு காரணம்." (online) Available : http://www.Battinews.com/2016/10/blog.post.825.html?m=1 (Accessed:04.05.2018)
- அருண், எச்.கே. , (2016), "பாடசாலை ஆங்கிலக் கல்வித் திட்டமும் எனது கருத்தும்", (online) Available : https://www.aangilam.page.tl/English-as-a-secong-language.htm (Accessed: 10.05.2018)
- இந்திராணி விஜய் குணவர்தன, (2016), (online) Available : http://www.thinakaran.lk/node/14671 (Accessed: 04.05.2018)
- யுக்கியோ, (2014), "ஆங்கில மொழி அவசியம்", (online) Available : http://www.kalvimalar.dinamalar.com/tamil/news-details.asp?id=22748&cat=1 (Accessed: 11.06.2018)
- British Study Center, (2015), "10 Reasons to Learn English", (online) Available : https://www.british-study.com/adults/10-reasons-to-learn-english-php. (Accessed: 10.06.2018)